# மாற்றுப் பயிராக வந்த மல்பெரி நாற்று உற்பத்தி

## 10.05.2013



மாற்றம் ஒன்றே மாறாதது இந்தத் தத்துவத்துக்கு ஏற்ப வழக்கமாகச் செய்யும் ஒரே பயிரைத் தொடர்ந்து செய்யாமல் மாற்றுப் பயிர்களைத் துணிந்து செய்தால்தான் இலாபம் எடுக்க முடியும் என்பதை புரிந்துகொண்டு கொஞ்சம் கொஞ்சமாக தங்களை மாற்றிக் கொண்டு வருகிறார்கள் தமிழ் விவசாயிகள். அந்த வகையில், ஈரோடு மாவட்டம், கோபி செட்டிபாளையம் வட்டம், கெட்டிசெவியூர் அடுத்துள்ள காளியப்பம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த மூர்த்தி – மகேஸ்வரி தம்பதி, மாற்றுப் பயிராக மல்பெரி நாற்றுக்களை உற்பத்தி செய்து சிறப்பான வருமானம் பார்க்கிறார்கள்.

தளதளவென பச்சை இலைகள் தலையாட்டும் மல்பெரி தோட்டத்தில், தெளிப்புநீர்க் கருவிகள் மழை போல் தண்ணீரைத் தெளித்துக் கொண்டிருக்கிறது.

இவருக்கு நான்கு ஏக்கர் தோட்டம் இருக்கிறது. மணல் கலந்த செம்மண் பூமி. மஞ்சள், மக்காச்சோளம், கடலை, கரும்பு, புகையிலை என்று எதைப் போட்டலும் நன்றாக வளர்கிறது. ஆனால் தண்ணீர் கொஞ்சம் பற்றாக்குறை. கிணறு, போர் இரண்டும் இருந்தாலும், கொஞ்சம் தட்டுப்பாடுதான். கிடைக்கும் தண்ணிரை வைத்து நான்கு ஏக்கரில் ஒரே சமயத்தில் சாகுபடி செய்ய முடிவதில்லை. குறைவான தண்ணீரை வைத்து என்ன பயிர் பண்ணலாம் என்று யோசித்து மல்பெரியை தேர்வு செய்துள்ளனர். பட்டுப்புழு வளர்ப்பிற்கு முக்கியமானது மல்பெரி. பட்டுப்புழு வளர்ப்பிலும் இறங்கி வெண்பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார் மூர்த்தி. மல்பெரி செடிகளில் பல ரகங்கள் உள்ளது. ஆரம்பத்தில் எம்.ஜி.ஆர் 2 என்கிற ரகத்தைத்தான் வளர்த்திருக்கிறார்கள். பின்பு வி-1 என்கிற ரகத்தைத்தான் பட்டுவளர்ச்சித் துறை விஞ்ஞானிகள் வெளியிட்டிருக்கிறார்கள். இதில் புரதம் அதிகம் இருப்பதால், மகசூலும் அதிகம் கிடைக்கிறது. இதை இரண்டு ஏக்கரில் சாகுபடி செய்திருக்கிறார். ஏழு வருடம் வரைக்கும் அறுவடை செய்யலாம் என்கிறார். இன்றைய தேதியில் வெண்பட்டு உற்பத்தியில் கொடிகட்டி பறக்கிறது கோபிசெட்டிபாளையம். ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் வெண்பட்டு உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அதனால் மல்பெரி செடி சாகுபடியும், தேவையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. குறிப்பாக, வி-1 ரகத்திற்கு அதிக தேவை இருக்கிறது.

பொதுவாக, மல்பெரிக்கு விதைக் கரணைகளை நடும்பொழுது சிலருக்கு சரியாக வளருவதில்லை. அதுக்கு தீர்வு கேட்டபோது நாற்று முறையில் நடவு செய்தால் நன்றாக வளரும் என்று அதிகாரிகள் கூறினார்கள். அதனால் வீட்டு பக்கமாக இருக்கிற 25 செண்ட் நிலத்தில் வி-1 ரகத்தை நட்டு நாற்று உற்பத்தியை

ஆரம்பித்ததாக கூறுகிறார். இந்த இரகத்தில் அதிகமான புரதச் சத்து இருப்பதால் கறவை மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் இதை தீவனமாக கொடுக்கிறார்கள். இதைச் சாப்பிடும் மாடுகள் அதகிமாக பால் கறக்கும். ஆடுகள் வேகமாக வளரும். தேவை இருப்பதால் நாற்று விற்பனைக்குப் பிரச்சனை இல்லை. ஒரு நாற்று 2 ரூபாய்க்கு விற்கிறார்கள். 25 சென்ட் மூலமாக ஐந்து மாதத்தில் ஒரு லட்ச ரூபாய் அளவுக்கு வருமானம் கிடைக்கிறது. அதில் செலவு போக 80 ஆயிரம் ரூபாய் லாபம் என்கிறார்கள்.

---


**தொடர்புக்கு**

**மூர்த்தி**

**அலைபேசி : 98427-23677**